அல்லாஹ்வின் கட்டளை

وَلَا تَيَمَّمُوا الْخَبِيثَ مِنْهُ تُنْفِقُونَ وَلَسْتُمْ بِآخِذِيهِ إِلَّا أَنْ تُغْمِضُوا فِيهِ ۚ وَاعْلَمُوا أَنَّ اللَّهَ غَنِيٌّ حَمِيدٌ

நீங்கள் செலவிடுகின்றதும், ஆனால் நீங்களே கண்மூடியவர்களாக அல்லாமல் பெற்றுக் கொள்ள விரும்பாததுமான பொருள்களை (தருமத்திற்காக) நாடாதீர்கள். அல்லாஹ் (முற்றிலும்) தேவைகளற்றவனும், பெரும் புகழுக்குரியவனுமாவான் என்பதையும் தெரிந்துக் கொள்ளுங்கள். (2:268)

بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللَّهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 38

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

09 முஹர்ரம் 1440 ஹிஜ்ரி கமரி 20 தபூக் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி
20 செப்டம்பர் 2018


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ என்ற இந்த துஆவில் ஒரு முன்னறிவிப்பு மறைந்துள்ளது. அதாவது முஸ்லிம்களில் சிலர் உண்மையிலும் தூய்மையிலும் நிலைத்திருந்த காரணத்தால் முற்காலத்திலுள்ள நபிமார்களின் வாரிசாக ஆவார்கள் என்றும் நுபுவ்வத், ரிஸாலத் ஆகியவற்றின் அருட்கொடைகளைப் பெறுவார்கள் என்றும் சிலர் இவ்வுலகிலேயே இறை ஆக்கினை இறங்கிய யூதர்களின் குணம் உடையவர்களாக ஆகிவிடுவார்கள் என்றும் மற்றுஞ்சிலர் கிறித்தவர்களது போர்வையில் காணப்படுவார்கள் என்பதும் ஆகும். ஏனெனில், ஒரு கூட்டத்தாரை ஒரு வேலையிலிருந்து இறைவன் தடை செய்யும் போது நிச்சயமாக அவர்களில் சிலர் அவ்வேலையைச் செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இது இறைவனின் நுட்பமான ஞானத்தின் வெளிப்பாடாகும். மேலும் சிலர் நன்மையிலும் அதிர்ஷ்டத்திலும் பங்கு கொள்பவர்களாக இருக்கிறார்கள் என்பது எப்போதும் இறைவனது சொல்லில் இருந்து வரக்கூடிய நடைமுறையாகும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் (நூஹ் நபியின் கப்பல்) என்ற நூலிலிருந்து…

சூரா ஃபாத்திஹாவில் வெறும் போதனை மட்டும் அல்ல. மாறாக, அதில் பெரும் முன்னறிவிப்பும் இடம் பெற்றிருக்கிறது. அதாவது, இறைவன் தனது நான்கு பண்புகளாகிய ருபூபிய்யத் (படைத்து பரிபாலித்தல்), ரஹ்மானிய்யத் (அருள் செய்தல்), ரஹீமிய்யத் (கருணை காட்டுதல்) மாலிக்கி யவ்மித்தீன் (நன்மை தீமைக்கு பிரதிபலன் அளித்து அதன் மீது தனது அதிகாரத்தையும் பொதுவான வல்லமைகளையும் வெளிப்படுத்துதல்) ஆகியவற்றிற்குப் பிறகுள்ள வசனங்களில் இந்த துஆவையும் கற்றுத் தந்துள்ளான்.

இறைவா! சென்று போன உண்மையாளர்களாகிய நபிமார்கள், ரஸூல்மார்கள் ஆகியோரின் வாரிசுகளாக எங்களையும் ஆக்குவாயாக. அவர்களது வழிகளை எங்களுக்குத் திறப்பாயாக. அவர்களது அருட்கொடைகளை எங்களுக்குத் தந்தருள்வாயாக.

இறைவா! எவர்கள் மீது உலகிலேயே உனது ஆக்கினை இறங்கியதோ அக்கூட்டத்தினரைச் சேர்ந்தவர்களாக நாங்கள் ஆவதிலிருந்தும் நீ எங்களைப் பாதுகாப்பாயாக. அதாவது, ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் காலத்தில் பிளேக்கால் அழிக்கப்பட்ட யூதர்கள்.

இறைவா! உனது வழிகாட்டல் பெறாமல் வழி கெட்டுப்போன கூட்டத்தாரைச் சேர்ந்தவர்களாக அதாவது கிறித்தவர்களைப் போன்றவர்களாக நாங்கள் ஆவதிலிருந்தும் நீ எங்களைப் பாதுகாப்பாயாக.

இந்த துஆவில் ஒரு முன்னறிவிப்பு மறைந்துள்ளது. அதாவது முஸ்லிம்களில் சிலர் உண்மையிலும் தூய்மையிலும் நிலைத்திருந்த காரணத்தால் முற்காலத்திலுள்ள நபிமார்களின் வாரிசாக ஆவார்கள் என்றும் நுபுவ்வத், ரிஸாலத் ஆகியவற்றின் அருட்கொடைகளைப் பெறுவார்கள் என்றும் சிலர் இவ்வுலகிலேயே இறை ஆக்கினை இறங்கிய யூதர்களின் குணம் உடையவர்களாக ஆகிவிடுவார்கள் என்றும் மற்றுஞ்சிலர் கிறித்தவர்களது போர்வையில் காணப்படுவார்கள் என்பதும் ஆகும்.

ஏனெனில், ஒரு கூட்டத்தாரை ஒரு வேலையிலிருந்து இறைவன் தடை செய்யும் போது நிச்சயமாக அவர்களில் சிலர் அவ்வேலையை செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இது இறைவனின் நுட்பமான ஞானத்தின் வெளிப்பாடாகும். மேலும் சிலர் நன்மையிலும் அதிர்ஷ்டத்திலும் பங்கு கொள்பவர்களாக இருக்கிறார்கள் என்பது எப்போதும் இறைவனது சொல்லில் இருந்து வரக்கூடிய நடைமுறையாகும்.

உலகின் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை இறைவன் எத்தனை வேதங்களை அனுப்பியுள்ளானோ அந்த எல்லா வேதங்களிலும் ஆதியிலிருந்தே இருந்து வரக்கூடிய இறைவனுடைய பழைய நடைமுறை என்னவெனில், அவன் ஏதாவதொரு சமுதாயத்தினரை ஒரு வேலையிலிருந்து தடை செய்யும்போது அல்லது ஒரு வேலையைச் செய்யத் தூண்டும்போது சிலர் அவ்வேலையைச்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்…)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ (ரலி), ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹான் (ரலி), ஹஸ்ரத் ஸஅது பின் ஹவ்லா (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபுல் ஹைஷம் (ரிழ்வானுல்லாஹி அலைஹிம்) ஆகிய சஹாபாக்களின் நற்குறிப்பு**

**இன்றும் எதிரிகளின் கைகளைத் தடுப்பதற்காக துஆக்கள் மூலமாகவே அல்லாஹ்விடம் உதவி கேட்க வேண்டிய தேவை இருக்கின்றது. அல்லாஹ்தான் இவர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். மேலும் நமக்காகவும் எளிய வழிகளை ஏற்படுத்தித் தருவானாக**

**மதிப்பிற்குரிய சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனான சாஹிப் ஸாதா மிர்ஸா மஜீத் அஹ்மது சாஹிப் மற்றும் பாகிஸ்தான் ஷேகுபூரா மாவட்டத்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய முஹம்மது யூசுஃப் சாஹிப் அவர்களின் மனைவியான சய்யிதா நஸீம் அக்தர் சாஹிபா ஆகிய இருவரது ஜனாஸா காயிப் தொழுகையை ஹுஸூர் அவர்கள் தொழ வைத்தார்கள். மேலும் மர்ஹூம்களின் நற்குறிப்பையும் எடுத்துக் கூறினார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 17 ஆகஸ்ட் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **ஸஹூர்** மாதம் **17 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ- الرَّحْمٰنِ الرَّحِيمِ- مٰلِكِ يَوْمِ الدِّينِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ- صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ

இன்று நான் சில பத்ர் சஹாபாக்களைப் பற்றி குறிப்பிடுவேன். அவர்களுள் முதலில் ***ஆமிர் பின் ரபிஆ*** ஆவார்கள். இவர்களது குடும்பத்திற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய தந்தையாரான கத்தாப் அவர்களின் மூலம் நட்பிலான தொடர்பு இருந்தது. ஹஸ்ரத் கத்தாப் அவர்கள் ஹஸ்ரத் ஆமிர் அவர்களை எடுத்து வளர்த்தார்கள். இதன் காரணமாக இவர் முதலில் ஆமிர் பின் கத்தாப் என்ற பெயரால் பிரபல்யமாக இருந்தார்.

திருக்குர்ஆன் ஒவ்வொருவரையும் அவரது சொந்த தகப்பனாரின் பெயரால் அழைக்க வேண்டும் என்று கட்டளையிட்டதால் அவர் கத்தாபின் மகன் ஆமிர் என்று அழைக்கப்படுவதற்குப் பதிலாக தனது சொந்த தகப்பனாரைக் கருத்தில் கொண்டு ஆமிர் பின் ரபிஆ என்று அழைக்கப்பட்டார்.

குழந்தைகளைத் தத்தெடுப்பவர்களுக்கு இதில் ஒரு தெளிவு உள்ளது. குழந்தைகளை எடுத்து வளர்க்கப்பட்டவர்களுக்கு அவர்கள் பெரியவர்கள் ஆகும் வரை தமது சொந்த தந்தையார் யார் என்றே தெரியாது. அடையாள அட்டைகளில் கூட அவர்களது அசல் தந்தையாரின் பெயருக்குப் பதில் அவரை எடுத்து வளர்ப்பவரின் பெயர் பதியப்படுகிறது.

பிறகு இதனால் பிரச்சனைகள் தோன்றுகின்றன. பிறகு மக்கள் இப்படி செய்ய வேண்டும்; இவ்வாறு செய்ய வேண்டும் என்று எனக்கு கடிதம் எழுதுகின்றனர். எனவே, ஓர் அமைப்பிலிருந்து குழந்தைகளை தத்து எடுக்கும்போது அவர்களின் தந்தையாரின் பெயர் தெரியாத நிலை இருந்தால் தவிர, எப்போதும் திருக்குர்ஆனின் கட்டளைக்கேற்ப செயல்பட வேண்டும். இந்தத் தெளிவுக்குப் பிறகு அடுத்து நான் (ஆமிர் பின் ரபீஆ) அவர்களைப் பற்றிக் கூறுவேன்.

இவர் நண்பராக இருந்த காரணத்தால் ஹஸ்ரத் ஆமிர் அவர்களுக்கும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கும் கடைசி வரை அந்த நட்பு தொடர்ந்து இருந்தது. இவர்கள் ஆரம்ப காலத்தில் முழுமையாக ஈமான் கொண்டவர்கள் ஆவர். ஈமான் கொண்ட காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தாரே அர்க்கமுக்கு வந்து தஞ்சமடையவில்லை.

(சீருஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 333, கராச்சியிலுள்ள ஒதாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆமிர் தமது மனைவியான லைலா பின்த் அஸ்மா உடன் ஹப்ஸாவுக்கு இடம் பெயர்ந்தார். பிறகு மக்காவுக்கு திரும்பி வந்தார். அங்கிருந்து தமது மனைவியுடன் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தார். ஆமிர் பின் ரபிஆவின் மனைவிக்கு முதன் முதலாக மதீனாவுக்கு இடம் பெயரும் பெண் என்ற கவுரவம் கிடைத்துள்ளது.

இவர் பத்ர் மற்றும் எல்லா போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார். இவரது மரணம் ஹிஜ்ரி 32 –ல் நடந்தது. இவர் அன்ஸ் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார். ஹஸ்ரத் ஆமிர் கூறுகிறார்: ஒருவர் ஒரு ஜனாஸாவை பார்த்து அத்துடன் செல்ல விரும்பவில்லை என்றால் அது கடந்து செல்லும் வரை அல்லது வைக்கப்படும் வரை நிற்க வேண்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அப்துல்லாஹ் பின் ஆமிர் தமது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்: அவர் ஒருநாள் தொழுகைக்காக நின்றபோது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றி மக்கள் கருத்து வேறுபாடு கொண்டிருந்த அந்த நாட்களில் அப்போது குழப்பம் ஆரம்பமாகி இருந்தது. அந்த சமயத்தில் அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை ஏசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அன்னார் தொழுது விட்டு உறங்கி விட்டார்கள்.

கனவில் பார்த்தார்கள். அவர்களிடம், எழு; இந்த குழப்பத்திலிருந்து ஈடேற்றம் தருக என்று துஆ செய்வீராக. அதிலிருந்து அவன் தனது நல்லடியார்களுக்கு ஈடேற்றம் தந்துள்ளான். அது கிடைப்பதற்காக துஆ செய் என்று கூறப்படுகிறது. இந்த கனவிற்குப் பிறகு அன்னார் எழுந்தார்கள். தொழுதார்கள்.

பிறகு துஆ செய்தார்கள். இதற்குப் பிறகு அன்னார் நோயுற்றார்கள். பிறகு அவர்கள் தாமே வீட்டை விட்டு வெளியே வரவில்லை. அவரது ஜனாஸாதான் வெளியே வந்தது.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 118–119, ஆமிர் பின் ரபீஆ, பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அல்லாஹ் அவரை அந்தக் குழப்பத்திலிருந்து விடுவிப்பதற்காக இந்த நிலைமையை ஏற்படுத்தினான்.

ஹஸ்ரத் ஆமிர் அறிவிக்கின்றார்: நான் கஅபாவை வலம் வரும் போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தேன். அன்னாரது காலணியின் கயிறு அறுந்து விட்டது. நான் சரி செய்து தருகிறேன் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டேன். ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள், இது நன்மையில் முந்துவதாகும். நான் முந்த விடுவதை விரும்பவில்லை என்று கூறினார்கள்.

(ஷரஹ் ஸர்கானி, தொகுதி 6 பக்கம் 49, அல் ஃபஸ்லுஸ் ஸானி ஃபீமா அக்ரமல்லாஹு தஆலா பமனில் அஹ்லாகுஸ் ஸகிய்யா, 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

இந்த அளவுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது பணிகளைத் தாமே செய்ய வேண்டும் என்பதில் கவனம் செலுத்தினார்கள்.

ஒரு மனிதர் ஹஸ்ரத் ஆமிர் பின் ரபிஆவின் விருந்தாளியாக வந்தார். அன்னார் அவருக்கு சிறந்த விருந்தோம்பல் செய்தார்கள். கண்ணியப்படுத்தினார்கள். அவரைப் பற்றி ஹுஸூர் (ஸல்) அவர்களிடம் பரிந்துரை செய்தார்கள். அந்த மனிதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து ஆமிர் இடம் வந்து கூறினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து நான் அன்பளிப்பாக எவ்வளவு சிறந்த ஒரு நிலப் பகுதியை வாங்கினேன் என்றால் அதனை விட சிறந்த நிலப்பகுதி அரஃபாத்திலும் வேறு இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு அதனை வழங்கினார்கள். அதன் ஒரு பகுதியை நான் உமக்கு தர விரும்புகிறேன். வாழ்நாள் முழுக்க அது உம்மிடம் இருக்கட்டும். பிறகு அது உமது சந்ததிகளுக்காக இருக்கட்டும் என்றார்.

ஹஸ்ரத் ஆமிர் கூறினார்கள்: உமது அந்த சிறு நிலத் துண்டை வாங்க வேண்டிய தேவை எனக்கு இல்லை. ஏனெனில் இன்று ஒரு அத்தியாயம் (சூரா) இறங்கியுள்ளது. அது என்னை இந்த உலகத்தையே மறக்கடித்து விட்டது. அது இதுவாகும்:

اِقۡتَرَبَ لِلنَّاسِ حِسَابُهُمۡ وَهُمۡ فِیۡ غَفۡلَةٍ مُّعۡرِضُوۡنَ

அதாவது மக்களுக்கு அந்த கணக்கெடுக்கும் நாள் நெருங்கி விட்டது. இருந்தும் கூட கவனமற்ற நிலையில் அவர்கள் முகம் திருப்பியவாறு உள்ளனர்.

(முஹம்மது யூசுஃப் அவர்களது நூலான ஹயாத்துஸ் சஹாபா என்ற நூலிலிருந்து தொகுதி 2 பக்கம் 523, பாபு இன்ஃபாகுஸ் சஹாபா ஃபீ சபீலில்லாஹி, 1999 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

இந்த மின்னும் நட்சத்திரங்களிடம் இறைவனது அச்சம் அவர்களிடம் இந்த அளவுக்கு இருந்தது. இவர்கள் தான் உண்மையில் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கியவர்கள் ஆவர்.

ஹஸ்ரத் ஆமிர் பின் ரபிஆவிடமிடருந்து அறிவிக்கப்படுகிறது. ஸைத் பின் அம்ர் கூறினார்கள்: நான் எனது சமுதாயத்தை எதிர்த்து வந்தேன். இப்ராஹீமின் மில்லத்தை (மார்க்கத்தைப்) பின்பற்றி வந்தேன். ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களுடைய சந்நிதியிலிருந்து ஒரு நபியின் வருகையை எதிர்பார்த்திருந்தேன். அவரது கண்ணியத்திற்குரிய பெயர் அஹ்மது ஆக இருக்கும். நான் அவரை பார்க்க முடியாது என்று நினைத்திருந்தேன்.

அவர் மீது நான் ஈமான் கொண்டுள்ளேன். அவரை உண்மைப்படுத்துகிறேன். நான் சாட்சி பகர்கிறேன். எனக்கு அவரை பார்க்க வாய்ப்பு கிடைத்தால் எனது ஸலாத்தை அவரிடம் தெரிவிக்க வேண்டும். நான் அவருடைய அடையாளங்களைக் கூறுகிறேன். அது உங்களுக்கு மறைவாக இருக்காது. அவர் மிகவும் உயரமாகவோ மிகவும் குள்ளமாகவோ இருக்க மாட்டார். அவரது முடி மிக அதிகமாகவோ மிகக் குறைவாகவோ இருக்காது. அவரது கண்களில் எப்போதும் சிவப்பு காணப்படும். அவர்களது தோள்களுக்கு நடுவில் நுபுவ்வத்தின் முத்திரை இருக்கும். அவர்களது பெயர் அஹ்மது ஆக இருக்கும்.

மக்கா அவரது பிறக்கும் ஊராகவும், பைஅத் வாங்கும் இடமாகவும் இருக்கும். அவரது சமுதாயம் அவரை அங்கிருந்து வெளியேற்றும். அவரது தூதுச் செய்தியை விரும்பாது. அவர் பிறகு யஸ்ரபை நோக்கி இடம் பெயர்வார். பிறகு அவரது கட்டளை ஜெயிக்கும். இதனால் நீங்கள் ஏமாந்து விட வேண்டாம். இப்ராஹீமின் மார்க்கத்தை தேடி தேடி நான் ஊர் முழுக்க சுற்றினேன். நான் யூதர்களிடம், கிறிஸ்தவர்களிடம், நெருப்பு வணங்கிகளிடம் கேட்டேன்.

அவர்கள், அந்த மார்க்கம் உமக்குப் பின்னால் உள்ளது என்று கூறி நான் கூறிய அடையாளங்களைக் கூறினர். மேலும் அவர்கள், அவருக்குப் பிறகு எந்த நபியும் வர மாட்டார் என்றும் கூறினர்.

ஹஸ்ரத் ஆமிர் கூறினார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றிய போது நான் நபி (ஸல்) அவர்களிடம் ஸைத் பற்றி கூறினேன். அன்னார் கூறினார்கள்: நான் அவரை சுவர்க்கத்தில் பார்த்தேன். அவர் தனது பாதத்தைக் கொண்டு தவழ்ந்தவாறு சென்று கொண்டிருந்தார்.

(சுபலுல் ஹுதா வர் ரஷாது தொகுதி 1 பக்கம் 116, ஃபீமா அக்ரப ஃபீஹில் அஹ்பாரி வர் ரஹ்பான், 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

நபி வரமாட்டார் என்ற இந்த அறிவிப்பிலிருந்து, உம்மதி நபியைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறிய முன்னறிவிப்பு தவறானது என்ற கருத்து அல்ல. இதன் கருத்து அவர்களே கடைசி ஷரீஅத்தைக் கொண்ட நபி ஆவார்கள். வேறு எந்த ஷரீஅத்தும் வராது. வரக்கூடியவர் அன்னாரின் அடிமையாகவே வருவார் என்பதாகும். இதுவே ஹதீஸ்களிலிருந்தும் திருக்குர்ஆனிலிருந்தும் தெரிய வருவதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆமிருக்கு ஹஸ்ரத் யஸீது பின் முன்ஸர் அவர்களுடன் சகோதரத்துவத்தை ஏற்படுத்தியிருந்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா, தொகுதி 3 பக்கம் 296 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆமிர் பின் ரபிஆ ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஷஹிதாக்கப்பட்ட சில நாட்களுக்குப் பிறகு வஃபாத் ஆனார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 119 – ஆமிர் பின் ரபீஆ, பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

இரண்டாவது சஹாபி **ஹராம் பின் மில்ஹான்**. இவர் அன்ஸாரின் பனூ அதீ பின் நஜ்ஜார் கோத்திரத்தைச் சார்ந்தவர். இவரது தந்தை மில்ஹான் என்பவரது பெயர் மாலிக் பின் காலித் என்பதாகும். ஹராம் பின் மில்ஹானின் தாயார் முலைக்கா பின் மாலிக் என்பவராவார்.

இவரது ஒரு சகோதரி உம்மே சுலைம் என்பவர். இவர் அபூ தல்ஹா அன்ஸாரியின் மனைவியும் அனஸ் பின் மாலிகின் தாயாரும் ஆவார். அவரது இரண்டாவது சகோதரி ஹஸ்ரத் உம்மே ஹராம். இவர் உபாதா பின் ஸாபித்தின் மனைவி ஆவார். ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹான் ஹஸ்ரத் அனஸின் மாமா ஆவார். இவர் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டவர். பிஃரே மவூனாவின் நாளில் ஷஹீத் ஆனவர்.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: சிலர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். எங்களிடம் சிலரை அனுப்புங்கள். அவர்கள் எங்களுக்கு குர்ஆன் மற்றும் சுன்னத்தைக் கற்றுத் தர வேண்டும் என்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 70 நபரை அனுப்பினார்கள். அவர்கள் திருக்குர்ஆன் காரிகளாக இருந்தனர். அவர்களுள் எனது மாமா ஹராம் அவர்களும் இருந்தார்கள்.

இவர்கள் திருக்குர்ஆனை ஓதி அதிலிருந்து தர்ஸ் கொடுத்து வந்தார்கள். பகல் பொழுதில் பள்ளியில் தண்ணீர் எடுத்து வைப்பார்கள். காட்டிற்குச் சென்று விறகுகளை எடுத்து வந்து அதிலிருந்து திண்ணைத் தோழர்களுக்கும் ஏழைகளுக்கும் தேவையானவற்றை வழங்குவார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா, தொகுதி 3 பக்கம் 390 – ஹராம் பின் மல்ஹான், 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா தொகுதி 8 பக்கம் 375–376, உம்மே ஹராம் பின்த் மில்ஹான், தொகுதி 8 பக்கம் 408–409, 1995 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹானின் பிஃரே மாவூனாவின் சம்பவம் பற்றி சில மாதங்களுக்கு முன் குத்பாவில் கூறியுள்ளேன். பிஃரே மாவூனா சம்பவமும் கூறினேன். இன்னும் சில இடங்களிலும் கூட கூறி விட்டேன். அது சம்பந்தமாக புகாரியின் சில அறிவிப்புகளைக் கூறுகிறேன். அவை முன்னர் நான் கூறாதவையாகும்.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அறிவிக்கின்றார்கள்: ஹராம் பின் மில்ஹான் அவர்கள் பிஃரே மவூனாவின் நாளில் கொல்லப்பட்டார்கள். இவர் தமது இரத்தத்தைக் கையில் ஏந்தி தமது முகத்திலும் தலையிலும் தெளித்தார்கள். பிறகு கூறினார்:

فُزْتُ بِرَبِّ الْكَعْبَةِ அதாவது கஅபாவின் இறைவன் மீது ஆணையாக! நான் வெற்றி பெற்று விட்டேன்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி, பாப் கஸ்வாத்துர் ரஜீஃ ஹதீஸ் எண் 4092)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ரிஃல், ஸக்வான், உஸய்யா, பனூலஹ்யான் கோத்திரத்தார் சிலர் வந்தனர். அவர்கள் நாங்கள் முஸ்லிமாகி விட்டோம் என்று கூறினர். அவர்கள் தமது சமுதாயத்திற்கு எதிராக உதவி கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களுக்கு 70 சஹாபிகளை அனுப்பி உதவி செய்தார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அவர்களை நாங்கள் காரி என்று கூறி வந்தோம். அவர்கள் பகல் பொழுதில் விறகு சேகரிப்பார்கள். இரவில் தொழுவார்கள். பிஃரா மவூனாவை அடைந்ததும் அவர்களை தாக்கி கொலை செய்து விட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு மாதம் வரை சில அறிவிப்புகளின்படி 40 நாட்கள் வரை தொழுகையில் நின்று ரிஃல், சக்வான், பனூ லஹ்யான் மக்களுக்காக பத் துஆ செய்தார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜிஹாது வஸ்ஸைர், பாபுல் ஊன் பில் மதத் ஹதீஸ் எண் 3064)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. காரிகள் கொலை செய்யப்பட்டபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மாதம் முழுக்க நின்று துஆ செய்தார்கள். புகாரியின் இன்னோர் அறிவிப்பில், நான் இதனை விட அதிகமாக இதற்கு முன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துக்கப்பட்டதை கண்டதில்லை என்று வருகிறது. (சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜனாயிஸ்... ஹதீஸ் எண் 1300)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ருகூவுக்கு பிறகு எழுந்து நின்று ஒரு மாதம் வரை பனூ சுலைமுடைய சில கோத்திரத்திற்கு எதிராக துஆ செய்தார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: அவர்களுள் 40 அல்லது 70 நபரை இணை வைப்பவர்களிடம் அனுப்பினார்கள். அந்த சமுதாயத்தினர் அவர்களை கொன்று விட்டார்கள். அந்த சமுதாயத்திற்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் இடையில் ஒப்பந்தமும் இருந்தது. எனவே இந்த காரிகள் விஷயத்தில் துரயம் கொண்டவர்களாக பார்த்தபோது இது போன்று வேறு எதிலும் பார்த்ததில்லை என்றும் வருகிறது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜிஸ்யா, பாபு துஆ அல் இமாம் அலி மன் நகஸ அஹ்தன் ஹதீஸ் எண் 3170)

பிறகு ஓர் அறிவிப்பு வருகிறது. இப்னு ஹிஷாம் எழுதிய வரலாற்று நூல். அந்த சந்தர்ப்பத்தில் அம்ர் பின் துஃபல் என்பவருடன் இருந்த ஜப்பார் பின் சல்மா இவர் பின்னர் முஸ்லிமாகி விட்டார். அவர் கூறுகிறார்: நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு ஒரு காரணம், நான் ஒரு மனிதரை அவரது இரு தோள்களுக்கு நடுவில் வெட்டினேன். ஈட்டி முனை அவரது நெஞ்சில் பதிந்து விட்டது. பிறகு அந்த மனிதரை கஅபாவின் இறைவன் மீது ஆணையாக! நான் எனது நோக்கத்தை அடைந்து விட்டேன் என்று கூறக் கேட்டேன். இதனை கேட்டு நான் அவரிடம் கூறினேன். என்ன வெற்றியை அடைந்து விட்டீர்? இவரை நான் ஷஹீதாக்கி விடவில்லையா? பிறகு நான் அவரது கூற்று சம்பந்தமாக கேட்டேன். மக்கள் கூறினர்: அதன் பொருள் ஷஹாதத் என்னும் அருளைப் பெறுவதாகும். நிச்சயமாக அவர் இறைவனின் பார்வையில் வெற்றி பெற்று விட்டார்தான் என்று ஜப்பார் கூறினார்.

(அல் அஸீரத்துன் நபவிய்யா லா பின் ஹிஷாம், பக்கம் 603 – 2001 ஆம் ஆண்டு லபனானிலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

இது போன்ற சம்பவங்கள் இரண்டு மூன்று சஹாபாக்கள் பற்றி வருகின்றன. வார்த்தைகள் ஒன்று போல் இருக்கின்றன. இவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதே அசல் நோக்கம் என்று கருதி இருந்தனர். உலகியல் வெற்றிகளைப் பெறுவது இவர்களின் நோக்கமாக இருந்ததில்லை. பிறகு இவர்களின் இந்த எண்ணத்திற்கு ஏற்பவே நான் அவர்களிடம் திருப்தி அடைந்தேன் என்று அல்லாஹ்வும் பிரகடனம் செய்தான். பிஃரே மவூனா சம்பவத்தில் சஹாபாக்கள் ஷஹீதாகும்போது இவ்வாறு துஆ செய்தனர்:

اَللّٰهُمَّ بَلِّغْ عَنَّا نَبِيَّنَا اَنَّا قَدْ لَقِيْنَاكَ فَرَضِيْنَا عَنْكَ وَرَضِيْتَ عَنَّا

அதாவது அல்லாஹ்வே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எமது நிலை பற்றி தகவல் தெரிவித்து விடுவாயாக. நாங்கள் உன்னை வந்து அடைந்து விட்டோம். நீ எங்களுடன் திருப்தி அடைந்துள்ளாய். நாங்கள் உன்னிடம் திருப்தி கொண்டுள்ளோம் என்பதை தெரிவித்து விடுவாயாக.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஜிப்ரீல் (அலை) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அந்த தோழர்கள் அல்லாஹ்வை சென்றடைந்து விட்டார்கள். அல்லாஹ் அவர்களைப் பற்றி திருப்தி அடைந்தான் என்று தெரிவித்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா, தொகுதி 3 பக்கம் 267, ஹராம் பின் மல்ஹான் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் இந்த சம்பவம் பற்றி குறிப்பிடுகின்றார்கள். பிஃரா மவூனா மற்றும் ரஜியில் இருந்து அந்தக் கோத்திரத்தினர் அரபு மக்களில் அளவு கடந்த பகையையும் காழ்ப்புணர்ச்சியும் கொண்டவர்களாக இருந்ததை அறிய முடிகிறது. அந்த மக்களிடம் இஸ்லாம் பற்றி மிகவும் கீழ்த்தரமான பொய், பகைமை மற்றும் சூழ்ச்சி தவிர வேறு வழியில்லாமல் இருந்தது. முஸ்லிம்கள் எவ்வளவுதான் எச்சரிக்கையாக இருந்தாலும் சில நேரங்களில் தமது நம்பிக்கையாளருக்கே உரிய நல்லெண்ணத்தின் காரணமாக எதிரிகளின் சதிக்கு இரையாகி விடுகின்றனர்.

திருக்குர்ஆனை மனனம் செய்தவர்கள், தொழுகையாளிகள் மற்றும் தஹஜ்ஜுத் தொழக் கூடியவர், மஸ்ஜிதின் ஓர் ஓரத்தில் அமர்ந்து இறைவனை திக்ர் செய்யக்கூடியவர், ஏழைகள், பட்டினி கிடப்பவர்கள் ஆகிய மக்களை இந்த அநீதியாளர்கள் மார்க்கம் கற்கிறோம் என்ற சாக்கில் தமது நாட்டிற்கு அழைத்தனர். இவர்கள் விருந்தாளிகளாக அந்த நாட்டிற்கு சென்று சேர்ந்தனர்.

அம்மக்களை மிகவும் இரக்கமற்ற முறையில் கொன்று விட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த சம்பவத்தால் எவ்வளவு துயரம் ஏற்பட்டது என்றால் அன்னார் இந்த பிஃரா மாவூனா, ரஜியின் இந்த வெறியர்களுக்கு எதிராக போர் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. கண்டிப்பாக துயரம் ஏற்பட்டதுதான். ஆனால் போர் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. விளைவு இந்த செய்தி கிடைத்த நேரத்திலிருந்து தொடர்ந்து 30 நாட்களுக்கு சுபுஹ் தொழுகையில் நின்ற நிலையில் மிகவும் வேதனையுடன் ரிஃல், ஸக்வான், உஸய்யா, பனூ லுஹ்யான்களின் பெயரைக் கூறி இறைவனிடம் துஆ செய்தார்கள்.

என் இறைவா! எங்கள் மீது நீ கருணை காட்டுவாயாக. இஸ்லாமிய எதிரிகளின் கையைத் தடுப்பாயாக. உனது மார்க்கத்தை அழிப்பதற்காக மிகவும் கடுமையான உள்ளத்துடன் இரக்கமற்ற முறையில் பாவமற்ற முஸ்லிம்களின் இரத்தத்தை சிந்தியுள்ளனர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களால் எழுதப்பட்ட சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 520–521)

இன்றும் கூட எதிரிகளை தடுப்பதற்கு துஆவின் மூலமே அல்லாஹ்வின் உதவியைப் பெற வேண்டிய தேவை உள்ளது. அல்லாஹ்தான் இவர்களை பிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நமக்கு அவனே எளிதை தருவானாக.

**சஅது பின் கவ்லா** என்ற ஒரு சஹாபி இருந்தார். சிலர் பார்வையில் இவர் இப்னு அபீ ருஹ்ம் பின் அப்தில் உஸ்மா ஆமிரின் சுதந்திரம் தரப்பட்ட அடிமை ஆவார்கள். இவர் இஸ்லாத்தை ஏற்றார். இவர் முந்தி விட்ட மக்களைச் சார்ந்தவராக இருந்தார். இவர் அபிஸீனியாவை நோக்கி இரண்டாம் முறை இடம் பெயர்ந்தவர்களைச் சார்ந்தவர்.

ஹஸரத் சஅத் பின் கவ்லா மக்காவிலிருந்து மதீனா நோக்கி ஹிஜ்ரத் செய்தபோது குல்ஸூம் பின் ஹிதம் அவர்களுடன் தங்கியிருந்தார். இவர் பத்ர் சஹாபிகளை சார்ந்தவர் என்று இப்னு இஸ்ஹாக் மூஸா பின் உக்பா கூறுகிறார்கள்.

ஸஅத் பின் கவ்லா பத்ர் போரில் கலந்து கொண்ட போது அவர்களுக்கு 25 வயதாகும். உஹத், அகழ், ஹுதைபிய்யா ஒப்பந்தம் ஆகியவற்றில் கலந்து கொண்டவர் ஆவார். ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் சுபைஆ அஸ்லமிய்யா உடைய கணவராக இருந்தார்கள். இவர்கள் ஹஜ்ஜதுல் விதாவின் சந்தர்ப்பத்தில் வஃபாத் ஆனார். இவர்களின் மரணத்திற்குப் பிறகு இவர்களது குழந்தை பிறந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரது மனைவியிடம் கூறினார்கள். குழந்தை பிறந்த பிறகு நீ விரும்பக்கூடியவருடன் மணமுடித்துக் கொள்ளலாம் என்றார்கள். ஹஜ்ஜதுல் விதாவின்போது இவர் மரணித்தது பற்றி திப்ரியாவைத் தவிர வேறு எவரும் கருத்து வேறுபாடு கொள்ளவில்லை. திப்ரியாவின் கருத்துப்படி, அவரது மரணம் ஹஜ்ஜத்துல் விதாவுக்கு முன்னர் நடந்தது என்பதாகும்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 209–210, ஸஅது பின் ஹவ்லா, 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா, தொகுதி 3 பக்கம் 217, ஸஅது பின் ஹவ்லா – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபுல் ஹைஸம் என்ற சஹாபி பற்றி வருகிறது. அபுல் ஹைஸம் பின் அத்தய்யிஹான் அன்ஸாரி. இவரது அசல் பெயர் மாலிக். அவர் அபுல் ஹைஸம் என்ற சுட்டுப் பெயரில் பிரபல்யமானார்.

இவரது தாயார் லைலா பின்த் அதீக் என்பவர் பல்லி என்ற கோத்திரத்தை சார்ந்தவராக இருந்தார். நிறைய ஆராய்ச்சியாளர்களின் கருத்தின்படி, இவர் அவ்ஸ் கோத்திரத்தின் ஒரு கிளையான பல்லி உடன் தொடர்புடையவராக இருந்தார். அது பனூ அப்தில் அஷ்ஹல் என்பதுடன் நட்புறவு கொண்டதாக இருந்தது.

(அல் அஸாபா ஃபீ தமீஸிஸ் சஹாபா, தொகுதி 7 பக்கம் 365, 1995 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா, தொகுதி 3 பக்கம் 341, அபுல் ஹைஷம் பின் அத்தைஹான்– 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & சீருஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 215, அபுல் ஹைஷம் பின் அத்தைஹான், கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

முஹம்மது பின் உமர் கூறுகிறார்: ஹஸ்ரத் அபுல் ஹைஷம் (ரலி) அறியாமை காலத்தில் கூட சில வணக்கத்திலிருந்து விலகி இருந்தார். அவ்வாறு செய்வதை ஏசுபவராக இருந்தார். ஹஸ்ரத் அஸ்அது பின் ஸுராராவும், அபுல் ஹைஷமும் தவ்ஹீதை ஏற்றுக் கொண்டவர்கள் ஆவர். இருவரும் ஆரம்ப கால அன்ஸார் ஆவர். இவர்கள் மக்காவில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா, தொகுதி 3 பக்கம் 341, அபுல் ஹைஷம் பின் அத்தைஹான்– 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

சிலரது பார்வையில் பைஅத்தே உக்பா ஊலாவிற்கு முன் ஹஸ்ரத் அஸ்ர் பின் ஸுராரா 6 பேருடன் மக்கா வந்து பைஅத் செய்தார். மதீனா திரும்பிய போது ஹஸ்ரத் அபுல் ஹைஸம் அவர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி கூற அழைப்பு விடுத்திருந்தார். ஏனெனில் அவரும் கூட இயற்கையான ஒரு மார்க்கத்தை தேடிக் கொண்டிருந்தார். எனவே அவர் உடனே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். பைஅத்தே உக்பா ஊலாவின்போது அவர் 12 பேருடன் மக்கா சென்றிருந்தார். அவர்களுள் இவரும் அடங்குவார். மக்கா சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்தார்.

(சீருஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 215, அபுல் ஹைஷம் பின் அத்தைஹான் – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

சீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் இது பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவை விட்டு தனித்து ஓரிடத்தில் அவர்களை சந்தித்தார்கள். அவர்கள் யஸ்ரிப் உடைய நிலைமைகளைப் பற்றி தெரிவித்தார்கள். அவர்கள் அனைவரும் முறைப்படி அன்னாரின் கையில் பைஅத் செய்தார்கள்.

இந்த பைஅத்தான் மதீனாவில் இஸ்லாம் நிலை பெறுவதற்கு அடிக்கல்லாக இருந்தது. அதுவரை வாள் கொண்டு போர் செய்வது அனுமதிக்கப்படவில்லை. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எந்த வார்த்தைகளில் பைஅத் வாங்கினார்களோ அந்த வார்த்தைகளைக் கொண்டு அன்னார் ஜிஹாது கடமையாக்கப்பட்ட பிறகு பெண்களிடம் பைஅத் வாங்கினார்கள்.

அதாவது நாங்கள் இறைவன் ஒருவன் என்று ஏற்போம். அவனுக்கு இணை வைக்க மாட்டோம். திருட மாட்டோம். விபச்சாரம் செய்ய மாட்டோம். கொலை செய்வதிலிருந்து விலகி இருப்போம். எவர் மீதும் அவதூறு புனைய மாட்டோம். ஒவ்வொரு நல்ல விஷயத்திலும் உங்களுக்கு கட்டுப்படுவோம் என்பதாக அது இருந்தது.

பைஅத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் உண்மை மற்றும் பற்றுடன் இந்த உடன்படிக்கையில் நிலைத்து நின்றால் உங்களுக்கு சுவர்க்கம் கிடைக்கும். நீங்கள் பலவீனம் காட்டினால் உங்கள் விவகாரம் அல்லாஹ்விடம் உள்ளது. அவன் எப்படி விரும்புவானோ அப்படி உங்களுடன் நடந்து கொள்வான்.

இந்த பைஅத் வரலாற்றில் பைஅத்தே உக்பா ஊலா என்ற பெயரில் பிரபல்யமாக உள்ளது. ஏனெனில் இந்த பைஅத் வாங்கப்பட்ட இடம் உக்பா என்று அழைக்கப்பட்டது. அது மக்காவுக்கும் மினாவுக்கும் நடுவில் இருந்தது. உக்பா என்ற சொல் மலை முகட்டைக் குறிக்கும்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களால் எழுதப்பட்ட சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 224–225)

ஹஸ்ரத் அபூ ஹைஷம் அவர்களுடன் 6 பேர் இருந்தனர். அவர்கள் தமது சமுதாயத்தில் எல்லாருக்கும் முதலில் மக்கா சென்று இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் ஆவர். பிறகு மதீனாவுக்கு திரும்பி வந்து இஸ்லாத்தை பரப்பினார்கள்.

அவர்களைப் பற்றி இவ்வாறும் ஓர் அறிவிப்பு கிடைக்கின்றது; ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சென்று சந்தித்த முதல் அன்ஸாரிகள் ஆவர். இவர்கள் பைஅத்தே உக்பா ஊலாவில் கலந்து கொண்டனர். பைஅத் உக்பா ஸானியா என்ற இரண்டாவது பைஅத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 70 அன்ஸாரிகளிலிருந்து 12 பேரை செய்தி சேகரிப்பதற்காக தேர்ந்தெடுத்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா, தொகுதி 3 பக்கம் 341–342 – அபூல் ஹைஸம் பின் அத்தைஹான், 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

நுக்பா என்பது நகீப் என்ற சொல்லின் பன்மையாகும். அறிவும் தகுதியும் வாய்ந்தவர் என்று அதற்கு பொருள். இவர்களை அக்கூட்டத்திற்கு தலைவராக நியமித்தார்கள்.

ஒரு ஹதீஸில் அறிவிக்கப்படுகிறது. பைஅத்தே உக்பாவின்போது ஹஸ்ரத் அபூ ஹைஷம் கேட்டார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களுக்கும் எங்களது சில கோத்திரத்தாருக்கும் இடையில் உடன்படிக்கை உள்ளது. நாங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளோம். பைஅத் செய்து உங்களுக்காகவே நாங்கள் ஆகி விட்டோம். இனி அந்த உடன்படிக்கை சம்பந்தமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்ன கூறுவார்களோ அவ்வாறே செய்வோம் என்றனர்.

இவ்விடத்தில் அபூ ஹைஷம் கூறுகின்றார்கள்: இந்த இடத்தில் உங்களிடம் நாங்கள் ஒரு கோரிக்கை வைக்கிறோம். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எங்கள் தொடர்புகள் உங்களுடன் உள்ளன. அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்யும்போது உங்களுக்கு சமுதாயத்தின் மீது வெற்றி கிடைக்கும்போது நீங்கள் எங்களை விட்டு விட்டு உங்கள் சமுதாயத்தாரிடம் போய் விடக் கூடாது. வேறுபட்டவர்களாக ஆக்கி விடாதீர்கள் என்று கூறினேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புன்னகைத்தவாறு கூறினார்கள்: இப்போது உங்கள் இரத்தம் என் இரத்தமாகி விட்டது. நீங்கள் என்னை சார்ந்தவர் ஆகி விட்டீர்கள். எவர் உங்களுடன் போர் செய்வாரோ அவர் என்னுடன் போர் செய்பவர் ஆவார்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 427, ஹதீஸ் எண் 15897, 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து இடம் பெயர்ந்த பிறகு ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் மற்றும் அபுல் ஹைஷம் அன்ஸாரி இருவருக்கும் இடையில் சகோதரத்துவத்தை ஏற்படுத்தினார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 7 பக்கம் 365, உம்மே ஹராம் பின்த் மில்ஹான், 1995 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் அன்ஸாரி சஹாபியிடம் சென்றார்கள். அவர்களுடன் அவர்களது நண்பர் ஒருவரும் இருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவரிடம் கூறினார்கள். உங்களிடம் தண்ணீர் இருந்தால் அல்லது இன்று இரவு தண்ணீர் பிடிக்கும் பாத்திரம் இருந்தால் கூப்பிடுங்கள். இல்லையென்றால் நாங்கள் இங்கிருந்தே வாயை வைத்து தண்ணீர் குடித்துக் கொள்வோம். அங்கு தண்ணீர் பொங்கிக் கொண்டிருக்கிறது. ஒருவர் தமது தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார்.

அம்மனிதர் கூறினார்: அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னிடம் இரவுக்கு தண்ணீர் இருக்கிறது. நீங்கள் கூடாரத்திற்குச் செல்லுங்கள். அம்மனிதர் அதாவது ஹஸ்ரத் அபூல் ஹைஷம் அன்னாரையும் அவர்களது உடன் வந்தவரையும் தன்னுடன் அழைத்துச் சென்றார். ஒரு பாத்திரத்தில் தண்ணீர் இட்டு பிறகு அதன் மீது ஆட்டின் பாலைப் பீய்ச்சினார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதனை அருந்தினார்கள். பிறகு உடன் வந்தவரும் அருந்தினார். இது புகாரியின் அறிவிப்பாகும்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் அஷ்ரபா ஹதீஸ் எண் 5613)

இதுபோன்று இன்னோர் அறிவிப்பு ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் அறிவிக்கின்றார்: ஹஸ்ரத் அபூஹேஷம் பின் அத்தய்ஹான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக உணவு தயார் செய்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களது சஹாபாக்களுக்கு அழைப்பு விடுத்தார். உணவு உண்டு முடித்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம் கூறினார்கள்.

நீங்கள் உங்கள் சகோதரருக்கு பதிலுக்கு கொடுங்கள். சஹாபாக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் என்ன பதில் தருவது? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு வீட்டிற்குச் சென்று நீங்கள் உணவு உண்டால் மற்றும் நீர் அருந்தினால் அவருக்காக துஆ செய்யுங்கள். அது அவரது உணவுக்கான பதில் வழங்குதல் ஆகும்.

(சுனன் அபீ தாவூது, கிதாபுல் அத்அமா, பாபு ஃபித்துஆயி லி ரப்பித் தஆமி... ஹதீஸ் எண் 3853)

இவை ஒவ்வொரு முஸ்லிமிடமும் இருக்க வேண்டிய உயர்ந்த ஒழுக்கங்களாகும்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பொதுவாக யாரும் வெளியே வராத, யாரும் எவரையும் சந்திக்காத நேரத்தில் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் வெளியே வந்தார்கள். பிறகு அன்னாரிடம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூபக்ரே! எது உம்மை இங்கே கொண்டு வந்தது? அதாவது வெளியில் ஏன் வந்தீர்கள்? என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களை சந்திக்க வந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அருளுக்குரிய முகத்தை காண வந்தேன். உங்களுக்கு ஸலாத்தை அனுப்ப வந்தேன் என்றார்கள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வந்தார்கள். உமரே! உம்மை எது இங்கே கொண்டு வந்தது? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவர், அல்லாஹ்வின் தூதரே! பசிதான் என்னை இங்கே கொண்டு வந்தது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனக்கும் சிறிது பசி எடுக்கிறது. பிறகு அவர்கள் ஹஸ்ரத் அபூ ஹைஷம் அன்ஸாரியின் வீட்டிற்குச் சென்றார்கள். அவர்களிடம் கணிசமான ஆடுகளும் பேரீத்தம் பழங்களும் இருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை வீட்டில் காண முடியவில்லை. அன்னார் அபூஹேஷம் உடைய மனைவியிடம் உங்கள் கணவர் எங்கே என்று கேட்டார்கள்.

அவர் கூறினார்: எங்களுக்காக இனிய நீர் எடுத்து வருவதற்காக சென்றுள்ளார். சிறிது நேரத்தில் அபூ ஹைஷம் தண்ணீர் பையுடன் வந்தார். தண்ணீர் பையை வைத்து விட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் வந்து அமர்ந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எனது உயிரும் பொருளும் உங்களுக்கே. எனது தாயும் தந்தையும் உங்களுக்கே அர்ப்பணம் என்றார்.

ஹஸ்ரத் அபூ ஹைஷம் அந்த மூன்று பேரையும் தமது தோட்டத்திற்கு அழைத்துச் சென்று ஒரு போர்வையை விரித்தார். பிறகு விரைவாக தோட்டத்திற்குள் சென்று ஒரு பேரீத்தம் பழக் கொத்தை வெட்டி எடுத்து வந்தார். அதில் காயும் பழமும் கலந்திருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபுல் ஹைஷமே! காய்களையோ பழங்களையோ கொண்டு வராமல் ஒரு குலையையே ஏன் கொண்டு வந்தீர்? என்று அவரிடம் கேட்டார்கள்.

ஹுஸூர்! நீங்கள் உங்கள் விருப்பம்போல் பச்சையையோ பழத்தையோ தேர்ந்தெடுத்து உண்ண வசதியாக நான் ஒரு குலையையே எடுத்து வந்தேன் என்று அவர் கூறினார்.ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் உமர் ஆகிய மூவரும் உண்டனர். தண்ணீர் அருந்தினர். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இறைவன் மீது ஆணையாக! குளிர்ந்த நிழல், குளிர்ந்த தண்ணீர், புத்தம் புதிய பேரீத்தம் பழங்கள் இவற்றைப் பற்றி மறுமை நாளில் நீர் கேட்கப்படுவீர் என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் அபூ ஹைஷம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உணவு தருவதற்காக எழுந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பால் தரும் ஆடுகளை அறுக்க வேண்டாம். உடனே அவர்கள் ஓர் ஆட்டுக் குட்டியை அறுத்தார். அதனை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். அனைவரும் அதனை உண்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உம்மிடம் பணியாளர் எவரும் இருக்கிறாரா? என்று கேட்டார்கள். அவர் இல்லை என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எங்களிடம் போர்க் கைதிகள் வரும்போது நீர் வர வேண்டும் என்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இரண்டு கைதிகள் வந்தபோது ஹஸ்ரத் அபூ ஹைஷம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த இருவரில் ஒருவரை நீரே தேர்ந்தெடுக்கவும் என்று கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் தேர்ந்தெடுங்கள் என்று அவர் கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எவரிடம் ஆலோசனை கேட்கப்படுகிறதோ அவர் நம்பிக்கைக்குரியவர் ஆவார் என்றார்கள்.

இது ஒவ்வொருவரும் குறிப்பாக செய்ய வேண்டிய விஷயமாகும். எவரிடம் ஆலோசனை கேட்கப்படுகிறதோ அவர் அமீன் (நம்பிக்கைக்குரியவர்) ஆவார். எனவே, அவர் நல்ல ஆலோசனை வழங்க வேண்டும்.

பிறகு அன்னார் கூறினார்கள்: இந்த பணியாளரை எடுத்துக் கொள்ளும். ஏனெனில் இவரை நான் இறைவணக்கம் செய்பவராகவே பார்த்துள்ளேன்.

இதில் கூறப்பட்ட பெருமை என்னவெனில் அந்த பணியாளருடைய சிறப்பு அவர் இறைவணக்கம் செய்கிறார். அல்லாஹ்வை நினைவு கூருகிறார். அவரது உள்ளத்தில் நன்மை உள்ளது.

அத்துடன் அன்னார் கூறினார்கள்: இவருடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். ஹஸ்ரத் அபூ ஹைஷம் தனது மனைவியிடம் திரும்பினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது போதனை பற்றி கூறினார்.

அந்த மனைவி கூறினார்: நல்ல முறையில் நடந்து கொள்ளமாறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறிய போதனையை நீர் முழுமையாக நிறைவேற்ற முடியாது.

ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்: இப்போது அடிமை கிடைத்துள்ளார். வேலை செய்வதற்கு வேறு எவரும் இல்லை; அப்படிப்பட்ட நிலையில் இந்த நம்பிக்கை கொண்ட பெண்ணின் தகுதியையும் உயர்தரத்தையும் பாருங்கள்!

அவருடைய மனைவி கூறினார்: நீர் அவரை விடுதலை செய்தால்தான் அவருக்குரிய உரிமையை நீர் நிறைவேற்றியதாக ஆகும். அப்போது அபுல் ஹைஷம் அவரை விடுதலை செய்து விட்டார்.

(சுனன் திர்மிதி, கிதாபுஸ் ஸுஹது, பாபு மாஜாஅ ஃபீ மயீஷத்தி அஸ்ஹாபிந் நபிய்யி (ஸல்), ஹதீஸ் எண் 2369)

இதுதான் சஹாபாக்களின் உயர்தரமாக இருந்தது. ஹஸ்ரத் அபூ ஹைஷம் பத்ர், உஹத், அகழ் மற்றும் எல்லா போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார். மூத்தா போரில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹாவின் ஷஹாதத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ ஹேஷம் அவர்களை பேரீத்தம் பழங்களை மதிப்பீடு செய்வதற்கு அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் இவரை பேரீத்தம் பழங்களை மதிப்பீடு செய்வதற்கு அனுப்ப விரும்பினார்கள். அவர் மன்னிப்பு கேட்டார். ஹஸ்ரத் அபூபக்ர் கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக பேரீத்தம் பழங்களை மதிப்பீடு செய்வதற்கு நீர் சென்றுள்ளீரே? என்ற கூறியதும் ஹஸ்ரத் அபூ

ஹைஷம் கூறினார்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக பேரீத்தம் பழங்களை மதீப்பீடு செய்தேன். நான் திரும்பி வந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்காக துஆ செய்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) கட்டளையிட்டால் முடியாது என்று அவர் மறுக்க மாட்டார். ஹஸ்ரத் அபூபக்ர் திரும்பவும் அவரை செல்லுமாறு கூறாதது அம்மனிதரின் உணர்வு நிலையினை அன்னார் புரிந்து கொண்டு மீண்டும் வலியுறுத்தவில்லை என்பதை வெளிப்படுத்துகிறது.

(அத்திப்காத்துல் குப்ரா, தொகுதி 3 பக்கம் 342 – அபுல் ஹைஷம் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கைபரின் யூதர்களை நாடு கடத்தினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரை அங்கு அனுப்பி அந்த பூமியை விலை நிர்ணயம் செய்யுமாறு அனுப்பினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதன் பக்கம் ஹஸ்ரத் அபூ ஹைஷம், ஹஸ்ரத் ஃபர்வா பின் அம்ர் மற்றும் ஹஸ்ரத் ஸைத் பின் ஸாபித் ஆகியோரை அனுப்பினார்கள். அவர்கள் சென்று கைபரின் பேரீத்த மரங்கள் மற்றும் நிலத்தை மதிப்பிட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதற்கு பாதி விலை தந்தார்கள். அது 50 ஆயிரம் திர்ஹமை விட அதிகமாகும்.

(கிதாபுல் மகாஸி லில் வாகிதி, தொகுதி 2 பக்கம் 165 – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

இங்கு பாருங்கள். இப்போது அவர் சென்று விட்டார். இப்போது நீண்ட காலக்கட்டம் சென்று விட்டதால் அந்த ஒரு உணர்வுப்பூர்வமான நிலை இல்லை. எனவே அவரை தடுக்கக் கூடிய எந்தவொரு நிலையும் இருக்கவில்லை.

அஸ்ஸலாமு அலைக்கும் கூறுவது சம்பந்தமாக அவரது ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் அபூ ஹைஷம் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினால் அவருக்கு 10 நன்மைகள் கிடைக்கும். அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ் என்று கூறினால் 20 நன்மைகள் கிடைக்கும். அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹூ என்று கூறினால் 30 நன்மைகள் கிடைக்கும்.

(அல் அஸாபா ஃபீ தமீஸிஸ் சஹாபா தொகுதி 7 பக்கம் 366, அபுல் ஹைஷம் பின் அத்தைஹான், 1995 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ ஹைஷம் உடைய மரணம் சம்பந்தமாக பல்வேறு கருத்துகள் உள்ளன. சிலரது பார்வையில் அன்னாரது வஃபாத் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் நிகழ்ந்தது. சிலரது பார்வையில் 20 அல்லது 21 ஹிஜ்ரியில் நடந்தது. மேலும் அன்னார் சிஃப்பீன் போரில் 27 ஹிஜ்ரியில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் சார்பாக சண்டையிட்டு ஷஹீதானார் என்றும் கூறப்படுகிறது.

(அத்திப்காத்துல் குப்ரா, தொகுதி 3 பக்கம் 342, அபுல் ஹைஷம் மாலிக் பின் அத்தைஹான் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 13, அபுல் ஹைஷம் பின் அத்தைஹான் – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

எனவே இவர்களே சஹாபாக்கள். நமக்காக முன்மாதியை விட்டுச் சென்றுள்ளனர். அதிகமான விஷயங்கள் குறித்து அவர்கள் நமக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். அல்லாஹ் அவர்களின் தகுதியை உயர்த்துவானாக.

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் இரு காயிப் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். முதல் ஜனாஸா சாஹிப் ஸாதா மிர்ஸா மஜீத் அஹ்மது சாஹிப். இவர் சாஹிப் ஸாதா ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிபின் மகன் ஆவார்கள். ஆகஸ்டு 14 ஆம் தேதியன்று தமது 94 –வது வயதில் வஃபாத் ஆனார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ இவர்களுக்கு 2000 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நெஞ்சில் அறுவை சிகிச்சை நடந்தது. அதன் பிறகு அங்கு பக்கவாதத்தின் பாதிப்பு ஏற்பட்டது. அதற்குப் பிறகு ஏறத்தாழ படுக்கையிலேயே இருந்தார்கள்.

18 ஜுலை 1924 –ல் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் மற்றும் ஸர்வர் சுல்தானா பேகம் சாஹிபா என்ற ஹஸ்ரத் குலாம் ஹஸன் சாஹிப் பெஷாவரின் மகளுக்கும் காதியானில் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை காதியானில் பெற்றார். காதியானில் தஃலீமுல் இஸ்லாம் உயர்நிலைப் பள்ளியில் மெட்ரிக் தேர்ச்சி பெற்றார். 1949 –ல் லாஹூர் அரசுக் கல்லூரியில் M.A. History நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றார்.

இவர்கள் தேர்ச்சி பெற்றதற்காக மக்கள் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களுக்கு வாழ்த்து கூறினார்கள். நன்றி தெரிவித்து விட்டு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் மேலும் எழுதினார்கள். முஃமின்களின் ஜமாஅத் தமது மகிழ்ச்சி மற்றும் துக்கம் இரு சந்தர்ப்பங்களிலும் ஒருவர் மற்றவருக்கு துணையாக நிற்பர். ஒருவர் மற்றவருக்கு துணை நிற்பதில்தான் நிம்மதியும் உறுதியும் பெறுவர். இதுவே ஜமாஅத் கொள்கையின் மையப் புள்ளியாகும்.

மேலும் எழுதுகிறார்கள்: நான் நண்பர்களிடம் விண்ணப்பித்துக் கொள்கிறேன். மகிழ்ச்சியில் பங்கு கொள்வதுடன் இவ்வாறு துஆவும் செய்யுங்கள். அல்லாஹ் மஜீத் அஹ்மது உடைய அறிவின் வெளிப்படையான தரத்தை வெளிப்படுத்தும் வாய்ப்பு தந்தது போன்று உண்மையான அறிவினை அவருக்கு வழங்குவானாக. பிறகு அந்த அறிவை செயல்படுத்தும் வாய்ப்பையும் வழங்குவானாக. ஏனெனில் நமது வாழ்வின் அசல் நோக்கமும் இறுதி இலக்கும் அதுவேயாகும்.

(மஸாமீன் பஷீர் தொகுதி 2 பக்கம் 605)

மிர்ஸா மஜீத் அஹ்மது சாஹிப் 7 மே 1944 –ல் தமது வாழ்வை மார்க்கத்திற்காக வக்ஃப் செய்தார்கள். அத்துடன் படிப்பையும் தொடர்ந்தார்கள். 1949 டிசம்பரில் ஜாமிஅத்துல் முபஷ்ஷிரீனில் சேர்ந்தார்கள். 1954 ஜுலை மாதம் ஜாமிஆ தேர்ச்சி பெற்றார்கள். 28 டிசம்பர் 1950 –ல் ஆண்டு மாநாட்டின் இறுதி நாளில் ஹஸ்ரத் நவாப் அப்துல்லாஹ் கான் சாஹிப் மற்றும் ஹஸ்ரத் நவாஸ் அமத்துல் ஹபீஸ் பேகம் சாஹிபாவின் மகளான குத்ஸியா பேகம் சாஹிபாவுடன் திருமணம் நடந்தது.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் திருமணத்தை நடத்தி வைத்தார்கள். இவர்களது சந்ததிகளில் மூத்த மகள் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிபின் பேரனாகிய மிர்ஸா நஸீர் அஹ்மது தாரிக் சாஹிபின் மனைவியாவார்கள். பிறகு இவரது மகன் மிர்ஸா மஹ்மூது அஹ்மது ஃபிர்தர்ஸமீன். இவரது ஒரு மகள் மீர் மஹ்மூது அஹ்மது ஆவார். பிறகு இவரது ஒரு மகள் துர்ரே ஸமீன் ஆவார். அவர் மீர் முஹ்மூது அஹ்மது சாஹிபின் மருமகள் ஆவார். பிறகு இன்னொரு மகன் மிர்ஸா குலாம் காதிர் சாஹிப் ஷஹீது.

ஸய்யித் தாவூது அஹ்மது சாஹிபின் மகளான அமத்துன் நாஸிர் சாஹிபா அவரது மனைவியாவார். பிறகு ஐந்தாவது மகளும்

உள்ளார். அவரது சந்ததிகளும் உள்ளனர். ஸய்யித் முதஸ்ஸர் அஹ்மது சாஹிபின் மனைவியான ஃபாயிஸா சாஹிபா. இவரும் வாழ்வை அர்ப்பணித்தவர் ஆவார்.

1954 ஜுலையில் மிர்ஸா மஜீத் அஹ்மது சாஹிப் ஷாஹித் பட்டம் பெற்றார். முதன்முறையாக 20 செப்டம்பர் 1954 –ல் ரப்வாவின் தஃலீமுல் இஸ்லாம் கல்லூரியில் நியமிக்கப்பட்டார். 4 நவம்பர் 1954 –ல் தஹ்ரீகே ஜதீதின் கீழ் கானாவில் உள்ள கமாஸி என்ற நகரத்திற்கு கல்லூரி முதல்வராக அனுப்பப்பட்டார்.

24 டிசம்பர் 1963 –ல் பாகிஸ்தான் திரும்பினார். பிறகு ஏப்ரல் 1964 –ல் தஃலீமுல் இஸ்லாம் கல்லூரியில் மீண்டும் நியமிக்கப்பட்டார். பிறக தஃலீமுல் இஸ்லாம் கல்லூரி தேசியமயமாக்கப்பட்ட போது பட்டு சாஹிபின் காலத்தில் 1975 ஏப்ரலில் தேசியமயமாக்கப்பட்ட பிறகு அன்னார் அங்கிருந்து ராஜினாமா செய்தார்.

நான் வாழ்வை அர்ப்பணிக்கிறேன் என்று அஞ்சுமனில் ரிப்போர்ட் செய்தார். 3 ஜுலை 1975 –ல் அன்னார் நாயிப் நாஸிர் தஃலீம் ஆக நியமிக்கப்பட்டார்கள். 1976 –ல் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப் பயணம் சென்றபோது மிர்ஸா மஜீத் அஹ்மது சாஹிப் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் தனிச் செயலராக இருந்தார்கள். 1978 –ல் அவர்கள் நாயிப் நாஸிர் அஃலாவாக நியமிக்கப்பட்டார்கள். 1984 –ல் இங்கிருந்து ஓய்வு பெற்றார்கள்.

இவர்களின் மருமகன் முத்தஸ்ஸிர் அஹ்மது சாஹிப் கூறுகிறார்:

இவர்கள் சீரத்துல் மஹ்தியின் சிறு பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அல் ஃபஸ்ல் –ல் தொடர்ந்து கட்டுரை எழுதி வந்தார். அறிவுள்ளவராக இருந்தார்கள். இந்தக் கட்டுரை நூல் வடிவில் நுக்தயே நஸ்ர் என்ற பெயரில் அச்சிடப்பட்டது. படிப்பதிலும் எழுதுவதிலும் நல்ல ஆர்வம் இருந்தது. பெரும்பாலான நேரங்களில் நூலகத்தில் வாசித்துக் கொண்டிருப்பதை பார்த்துள்ளேன்.

அவரது மருமகள் ஆகிய மிர்ஸா குலாம் காதிர் சாஹிபின் விதவை அமத்துன் நாஸிர் எழுதுகிறார்:

மிகவும் அன்பு நேசம் கொண்டவர். குழந்தைகளிடம் மிகவும் அன்பு காட்டுபவர். மாசற்ற திறந்த உள்ளம் படைத்த மனிதர். இவரது பெரிய சிறப்பு எல்லா வயது மக்களிடமும் அனுசரித்து நடந்து கொள்வார். குழந்தைகளுடனும் பெரியவர்களுடனும் இளைஞர்களுடனும் ஒரு நண்பர் போன்று நடந்து கொள்வார்.

தமது மகன் மிர்ஸா குலாம் காதிர் சாஹிபின் ஷஹாதத் நடந்தபோது மிகவும் பொறுமையின் முன்மாதிரி காட்டினார். ஷஹாதத்திற்குப் பிறகு மிர்ஸா மஜீத் அஹ்மது சாஹிப் மற்றும் அவர்களது துணைவியார் இருவரும் காதிர் சாஹிபின் குழந்தைகள் மீது மிகவும் கவனம் செலுத்துபவர்களாக இருந்தனர் என்று எழுதியுள்ளார்.

நீண்ட காலம் நோயுற்றிருந்தார். மிகவும் பொறுமை மற்றும் தைரியத்துடன் கழித்தார். கோபப்படும் இயல்பு இல்லை. எவருடன் தொடர்பு கொண்டாலும் மிகவும் களங்கமற்ற தொடர்பு கொள்வார். அதுபோன்று பணியாளர்களையும் கவனத்தில் வைப்பார்.

அவர்களது மருமகன் மிர்ஸா நஸீர் அஹ்மது சாஹிப் எழுதுகிறார்:

மிர்ஸா மஜீத் அஹ்மது சாஹிப் நல்ல கருத்து தெரிவிக்கும் தகுதி உடையவர். நல்ல தெளிவான கருத்து வைத்திருப்பார். என்ன கருத்து நிலவுகிறதோ அதையே நாமும் ஆமாம் போடுவோம் என்று நினைக்காமல் எது சரியோ தமது கருத்திற்கேற்ப அதனை வெளிப்படுத்துவார்.

அல்லாஹ் அவர்களுடன் மக்ஃபிரத் மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அவர்களின் குழந்தைகளுக்கும் அவர்களின் நன்மையை தொடரச் செய்வானாக. அவர்களை எப்போதும் கிலாஃபத்துடனும் ஜமாஅத்துடனும் தொடர்புடன் வைப்பானாக.

இரண்டாவது ஜனாஸா கண்ணியத்திற்குரிய ஸய்யிதா நஸீம் அக்தர் சாஹிபா. இவர் முஹம்மது யூசுப் சாஹிபின் மனைவியாவார். ஆன்பா நூர் என்ற ஷேகுபூரா மாவட்டத்தைச் சார்ந்த ஊரில் 27 ஜுலை 2018 –ல் இவரது வஃபாத் நிகழ்ந்தது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியான ஹஸ்ரத் வலி முஹம்மது உடைய தந்தைவழிப் பேத்தி மற்றும் காஸி தீன் முஹம்மது சாஹிபின் மகளும் ஆவார். நாடு பிரிவினைக்குப் பிறகு இவரது தந்தை இவரது குடும்பத்தை அழைத்துக் கொண்டு காதியானிலிருந்து இடம் பெயர்ந்து ரப்வாவுக்கு வந்தார்.

திருமணத்திற்குப் பிறகு ஆன்பா நூரியா என்ற ஊரில் வாழ்வை கழித்தார். அப்போது அவர் பல்வேறு ஜமாஅத் பொறுப்புகளில் பணியாற்றும் வாய்ப்பு பெற்றார்.

18 வருடம் உள்ளூர் மஜ்லிஸில் சத்ர் லஜ்னாவாக இருந்தார். நோன்பு தொழுகையை பேணுபவர். தஹஜ்ஜுத் தொழுபவர். ஏழைகள் மற்றும் அக்கம் பக்கத்தவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வார். எளிமையானவர். புன்னகையுடன் இருப்பார்.

மிகவும் மாசற்ற தூய்மை உள்ளவர். திருக்குர்ஆனை தொடர்ந்து ஓதுபவர். மொழிபெயர்ப்பை படிக்கக் கூடியவர். அதனை ஆய்வு செய்யும் வழக்கமுள்ளவர். பிறகு அதன்படி செயல்பட முயற்சியும் செய்வார். குழந்தைகளுக்கு திருக்குர்ஆன் ஓதக் கற்றுத் தந்தார்.

நிறைய அஹ்மதி மற்றும் அஹ்மதி அல்லாத குழந்தைகளுக்கு குர்ஆன் ஓதக் கற்றுத் தந்தார். இவர் மகன் மாலியில் முபல்லிக் ஆக இருக்கிறார். மாலி மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ளது. அங்கு நியமிக்கப்பட்டார். இவர் நியமிக்கப்பட்டபோது அங்கு எபோலா நோய் பரவியிருந்தது.

ஜமாஅத் அல்லாத ஒருவர் கூறினார்:

உங்கள் மகனை இப்போதுள்ள சூழலில் அங்கு அனுப்பாதீர்கள். தொற்றுநோய் பரவியுள்ளது. உடனே இவர் கூறினார்: நான் எனது இரு மகன்களும் வாழ்வை அர்ப்பணித்த முரப்பிகளாக உள்ளனர். இறைவனிடம் பெரும் துஆ செய்த பிறகே வக்ஃப் செய்துள்ளேன்.

வக்ஃப் செய்த பிறகு அவர்கள் அல்லாஹ்வுக்கு உரியவர்கள். அல்லாஹ் அவர்களிடம் எங்கு எப்படி பணியை வாங்குவான் என்பது பற்றி எனக்கு கவலையில்லை. எனக்கு இதில் பெரும் பெருமிதம் உள்ளது. இறைவன் எனது மகனுக்கு தனக்கு பணிவிடை செய்யும் வாய்ப்பு வழங்கியுள்ளான்.

இவர் தனது பிள்ளைகளிடமும் இவ்வாறே போதனை செய்திருந்தார். இறைவன் உங்களுக்கு பணி செய்யும் வாய்ப்பு தந்துள்ளான் என்றால் எப்போதும் அல்லாஹ்விடமும் அந்த வக்ஃபிலும் பற்றுறுதியை காட்ட வேண்டும்.

மர்ஹூமா வஸிய்யத் செய்தவர். அவர்களது மகன் நாஸிர் அஹ்மது மாலியின் முரப்பி ஆவார். அன்சர் மஹ்மூது சாஹிப் பாகிஸ்தானின் முரப்பி ஆவார். மாலியிலுள்ள மகன் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை.

அல்லாஹ் அவருக்கு பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக. மர்ஹூமாவின் தகுதியை உயர்த்துவானாக. அவர்களின் நன்மைகளை சந்ததிகளிடம் தொடரச் செய்வானாக.

# சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஜெர்மனி சுற்றுப் பயணம் 2017

23 ஏப்ரல் 2017 ல் ஜெர்மனியின் செயற்குழு கூட்டத்தில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கலந்து கொண்டு, பல்வேறு செயலர்கள் செய்கின்ற பணிகளைப் பற்றி கேட்டு அவர்களுக்கு வழங்கிய வழிகாட்டல்கள்

(அறிக்கை: அப்துல் மாஜித் தாஹிர், கூடுதல் வகீலுத் தஃப்ஸீர், இலண்டன்)

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

**ஒலி, ஒளி துறை:**

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

ஒலி, ஒளி துறை எந்தவொரு நிகழ்ச்சியை ஒளிபரப்புவது தொடர்பாகவோ அல்லது அதைப் பதிவு செய்வது தொடர்பாகவோ தலைமையகத்திலிருந்து அனுமதி பெறாதவரை அதனை செய்யக் கூடாது. இது தொடர்பாக நான் உங்களுக்கு எழுதியே அனுப்பியுள்ளேன். அதாவது இதற்காக தலைமையத்திலுள்ள நிகழ்ச்சி தயாரிப்பாளரிடமிருந்து அனுமதியை நீங்கள் பெற வேண்டும். அதற்குப் பிறகு தான் எந்தவொரு நிகழ்ச்சிகளையும் நீங்கள் ஒளிபரப்ப வேண்டும்.

அதனை இணையதளத்தில் கொடுப்பதாக இருந்தாலும் சரி; அல்லது வேறு எந்த இடத்திலும் அதை பரப்ப வேண்டும் என்றாலும் சரி. அதற்கான அதிகாரம் உங்களுக்கு இல்லை. சுயமே நீங்கள் எந்தவொரு நிகழ்ச்சியையும் ஒளிபரப்புவதற்கு அனுமதி வழங்கக்கூடாது என்று கூறினார்கள்.

அதற்குப் பிறகு ஒலி, ஒளி துறையுடைய செயலர் தனது அறிக்கையை ஹுஸூர் அவர்களிடம் எடுத்துக் கூறினார்கள். அவர்கள் கூறினார்கள். ஹுஸூர் அவர்களுடைய குத்பா பேருரையின் ஜெர்மன் மொழியாக்கத்தை சிறிய சிறிய தலைப்புகளில் வெளியிடுகின்ற பணியை செய்வதற்கான நற்பேறு எங்களுக்கு கிடைத்து வருகின்றது. இதற்காக நாங்கள் ஒரு மென்பொருளைத் தயார் செய்திருக்கின்றோம். அது இப்போது சோதனை கட்டத்தில் இருந்து வருகின்றது என்று கூறினார்.

**வக்ஃபே நவ் கூடுதல் செயலர்:**

வக்ஃபே நவ் கூடுதல் செயலர் வக்ஃபே நவ் எதிர்கால திட்டம் வகுத்தல் மற்றும் பயிற்சி அளித்தல் ஆகிய பணிகள் தமக்கு கீழ் நடந்து வருகின்றன என்று தெரிவித்தார்கள். மேலும் அவர்கள் மூன்று பகுதிகளாக பிரிக்கப்படுகின்றனர். அதாவது ஏதாவது வகுப்பில் உள்ளவர்களிடமிருந்து நாங்கள் பணியை ஆரம்பிக்கின்றோம். அதற்குப் பிறகு அதற்கு அடுத்த வகுப்புகளைச் சார்ந்தவர்களுக்கு பாடங்களைக் கற்றுக் கொடுக்கின்றோம்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

பல மாணவர்களும் படிப்பை விட்டு விடுகின்றனர். நீங்கள் அவர்களுக்கு சரியான முறையில் வழிகாட்டினால் ஜமாஅத்தின் சிறந்த சொத்துக்களாக இவர்களை ஆக்கலாம்.

அப்போது வக்ஃபே நவ் கூடுதல் செயலர் கூறினார்: இந்த விஷயத்திற்காக நாங்கள் ஒரு பயிற்சியாளர் அமைப்பை உருவாக்கியிருக்கின்றோம். அதாவது பல்கலைக்கழகங்களில் படித்து வருகின்ற மாணவர்களை வைத்து, அதிலும் குறிப்பாக பல்கலைக்கழகங்களில் படித்து வருகின்ற வக்ஃபே நவ் மாணவர்களை வைத்து 11 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு நாங்கள் பயிற்சி வழங்குகின்றோம். பல்கலைக்கழகங்களில் உள்ள மாணவர்கள் அவர்களுக்கு வழிகாட்டி வருகின்றனர். ஒவ்வொரு மாணவரும் தமது பொறுப்பில் 5 மாணவர்களை எடுத்துக் கொண்டு அவர்களது படிப்பு சம்பந்தமான வழிகாட்டல்களை வழங்குகின்றனர். தனிப்பட்ட முறையிலும் அவர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகின்றது என்று தெரிவித்தார்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

மிக நல்ல விஷயம். நீங்கள் அவர்களுடைய ஒரு குழுவை உருவாக்குங்கள். ஆனால் நான் இந்த விஷயத்தையும் பார்க்கின்றேன். அதாவது பல்கலைக்கழகங்களுக்குச் செல்லக்கூடிய மாணவர்களில் வக்ஃபே நவ் திட்டத்தில் பங்கு பெறுபவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே இருக்கின்றது. அவர்கள் ஏதாவதொரு துறையில் இளங்கலைப் பட்டம் பெற்று விட்டு அந்த கல்லூரியில் இணைந்து விடுகின்றனர். இரண்டு வருடங்கள் படிக்கின்றனர். பிறகு தோல்வி அடைகின்றனர். பிறகு நாங்கள் வேறு ஏதாவதொரு துறையில் செல்ல வேண்டும் என்று கூறுகின்றனர்.

எனவே அத்தகைய மாணவர்களுக்காக நாம் பயிற்சியாளர்களை தயார் செய்ய வேண்டும். பிறகு எந்த பயிற்சியாளரின் கீழ் அவர்கள் இருப்பார்களோ அதற்கு ஏற்பவே அவர்களுடைய திறமை வெளிப்படும். எனவே முதலில் நீங்கள் இதைப்பற்றி ஆய்வு செய்ய வேண்டும்.

அதாவது பல்கலைக்கழகங்களுக்குச் செல்லக்கூடிய மாணவர்களுக்கு கலந்தாய்வு மற்றும் பயிற்சி கொடுப்பதற்குரிய குழுவை உருவாக்க வேண்டும். அதில் படிக்கும் திறமை உள்ள மாணவர்கள் இருக்க வேண்டும். தான் சார்ந்துள்ள துறை பற்றிய முழுமையான தகவல்களை வழங்கக்கூடியவராக அவர் இருக்க வேண்டும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

இது தவிர நான் ஏற்கனவே கூயிருந்தேன். அஹ்மதிகள் அல்லாத மற்றவர்களிலும் ஏதாவதொரு துறையில் திறமை பெற்றவர்கள் இருக்கின்றனர். அவர்களையும் அழைத்து வருடத்தில் ஒன்றிரண்டு முறை 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு கலந்தாய்வு நடத்த வேண்டும்.

ஆனால் சிலர் இருக்கின்றார்கள். அவர்கள் மகிழ்ச்சியுடன் எந்தவொரு கூலியும் பெற்றுக் கொள்ளாமலேயே மாணவர்களுக்குக் கலந்தாய்வு அளிக்கத் தயாராக இருக்கின்றனர். அப்படிப்பட்டவர்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதற்குப் பிறகு வக்ஃபே நவ் கூடுதல் செயலர் கூறினார்கள்: பல்கலைக்கழகங்களில் படிக்கின்ற 232 வக்ஃபே நவ் மாணவர்கள் இருக்கின்றனர். எனவே நாங்கள் பல குழுக்களை அமைத்து வருகின்றோம். இவ்வாறு இதுவரை 18 குழுக்களை நாங்கள் உருவாக்கியிருக்கின்றோம். அதன் மூலமாக மாணவர்கள் ஒருவர் மற்றவருடன் தொடர்பு கொள்கின்றனர். அவர்களுக்கிடையில் ஒரு நட்புறவு உருவாகி விடுகின்றது. அவர்கள் சார்ந்துள்ள துறைக்கு ஏற்ப ஒருவர் மற்றவர்களுக்கு பயனளிக்கக்கூடிய வகையில் நல்ல ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி வருகின்றனர் என்று வக்ஃபே நவ் கூடுதல் செயலர் தெரிவித்தார்.

**சொத்து செயலர்:**

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கேட்டதற்கிணங்க சொத்து செயலர் இவ்வாறு கூறினார். இப்போது வரை ஜமாஅத்திற்கு ஜெர்மனியில் 77 சொத்துகள் உள்ளன. இந்த எல்லா சொத்துகளுடைய பதிவு சொத்து துறையிடம் இருக்கின்றது.

அப்போது ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

பைத்துல் ஆஃபிய்யத் தொடர்பாக நான் இதனைக் கேள்விப்பட்டேன். அதாவது அவர்கள் அங்கு சில மாற்றங்களை ஏற்படுத்துகின்றார்கள். ஒரு பெரிய ஹாலை மறைத்து அதில் சில அறைகளை ஏற்படுத்த இருக்கின்றார்கள். அதனால் என்ன பலன் ஏற்படும்? பிறகு ஒரு காலத்தில் அங்கு தொழுவதற்கான அனுமதி கிடைத்தால் இப்போது இவர்கள் பிரிக்கின்ற அந்த இடத்தை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டு விடும் என்று ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்.

அப்போது சொத்து செயலர் கூறினார். அங்குள்ள கவுன்சில் என்ன கூறுகின்றது என்றால், அங்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் தான் மக்கள் கூடுவதற்கான அனுமதி வழங்கப்படும். உங்களிடத்தில் தரை தளத்தில் பெருமளவு இடம் இருக்கின்றது என்று ஹுஸூர் அவர்களிடம் கூறினார்.

அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் அங்கு பெரும்பெரும் அறைகளைக் கட்டியிருக்க வேண்டும். உங்களுடைய திட்டம் எவ்வாறு இருக்க வேண்டும் என்றால் இதற்குப் பிறகும் ஏதாவதொரு தேவைக்காக அந்த இடத்தை நாம் பயன்படுத்த வேண்டியது வந்தால் அதில் எந்தவொரு தடையும் ஏற்படக்கூடாது.

உதாரணமாக, மூவாயிரம் பேர் அங்கு ஜுமுஆ தொழ வந்தால் அவர்களில் ஏறக்குறைய இரண்டாயிரம் பேர் பைத்துல் ஆஃபியத்தில் தொழுவதற்கு இடமிருக்க வேண்டும். இவ்வாறு நீங்கள் திட்டம் தீட்டினால் குறைந்தபட்சம் இரண்டாயிரம் பேருக்கு அந்த இடம் போதுமானதாக இருக்கும் என்று ஹுஸூர் அவர்கள் தெரிவித்தார்கள்.

அப்போது சொத்து செயலர் கூறினார். இதனுடைய மேற்பகுதி வாடகைக்கு விடப்பட்டுள்ளது. ஒரு தொலைக்காட்சி சேனல் அங்கு வாடகைக்கு இருந்து வருகிறது. அந்த தொலைக்காட்சி சேனலோடு பதினெட்டு மாதங்களுக்கான ஒப்புதல் இருக்கின்றது. அது விரைவில் முடிந்து விடும் என்று கூறினார்கள்.

அப்போது ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

நல்லது. இதையும் நீங்கள் ஜமாஅத்திற்காகப் பயன்படுத்தலாம். வாடகைக்கு விடுவதற்காக நாம் ஜமாஅத் கட்டிடத்தை கட்டவில்லை என்று கூறினார்கள். பிறகு ஜெர்மனி அமீர் சாஹிப் அவர்கள் கூறினார்கள். கவுன்சில் எங்களிடம் கூறியது என்னவென்றால், இங்கு மிகப்பெரும் அளவில் மக்கள் கூடுகின்ற எந்தவொரு நிகழ்ச்சியையும் நடத்துவதற்கான அனுமதியில்லை. அவ்வாறு நீங்கள் நடத்த முடியாது என்று கூறினார்கள். ஏனென்றால் இங்குள்ள ஹால் சேமிப்பு அறையாக பயன்படுத்துவதற்காகக் கட்டப்பட்டுள்ளது. இதனை நீங்கள் மக்கள் கூடும் ஹாலாக பயன்படுத்தக்கூடாது என்று கவுன்சில் எங்களுக்குத் தெரிவித்துள்ளது என்று கூறினார்கள்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

ஆனால் சொத்து செயலர் கூறியதற்கிணங்க இங்கு வாகனங்களை நிறுத்துவது தொடர்பாக உள்ள பிரச்சனைகளை தீர்த்து வைத்தால் இந்த ஹாலுக்கும் கூட மக்கள் ஒன்று கூடுவதற்கான அனுமதியை நாம் பெற முடியும். எனவே இது நடைபெற முடியாத விஷயமல்ல. எந்நிலையிலும் இப்போது அங்கு அனுமதி கிடைத்துள்ளதா? இல்லையா? என்பது நமக்குத் தெரியவில்லை. எனவே இப்போது இருக்கும் நிலையிலேயே அதனை விட்டுவிடுங்கள். எதிர்காலத்தில் நாம் அதனை பயன்படுத்திக் கொள்ளலாம்.

எனவே அந்த ஹாலை மேலும் சிறிதாக்கவோ அல்லது பிரிக்கவோ எந்தத் தேவையும் இல்லை. ஏனெனில் 1 அல்லது 2 வருடங்களுக்குப் பிறகு நமக்கு அனுமதி கிடைக்கலாம். சிறிய சிறிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்குக் கூட அனுமதி கிடைக்கலாம். அல்லது அவசர நிலைகளில் அதனைப் பயன்படுத்துவதற்கான அனுமதி கிடைக்கலாம். எல்லா சமயத்திலும் அந்த ஹாலை பயன்படுத்த வேண்டும் என்று நான் கூறவில்லை.

குறைந்தபட்சம் அன்ஸாருல்லாஹ் அமைப்பானது 200, 300 பேர் கூடுகின்ற நிகழ்ச்சியை அங்கு நடத்த முடியும். இவ்வாறு லஜ்னாக்களும் தமது சிறிய நிகழ்ச்சிகளை அங்கு நடத்தலாம். பிறகு கவுன்சில் ஒரு காலத்தில் நமக்கு அனுமதி வழங்கும் சமயத்தில் ஜுமுஆ தொழுகையைக்கூட அங்கு நாம் நடத்தலாம். அதற்காக அந்த ஹாலை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

**கூடுதல் சொத்து செயலர் – 100 பள்ளிவாசல்கள் கட்டுவதற்கான திட்டம்:**

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

நான் ஏற்கனவே வழிகாட்டல்களை வழங்கி விட்டேன். அதாவது எந்தவொரு புதிய பள்ளிவாசலை கட்டுவதாக இருந்தாலும் அதற்கான விவகாரத்தை என்னிடம் நேரடியாகக் கொண்டு வர வேண்டும். எனவே கூடுதல் சொத்து செயலரும் சொத்து செயலருடன் இணைந்து என்னிடம் வர வேண்டும் என்று ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்.

*(தொடரும் - இன்ஷா அல்லாஹ்...)*

## தேசிய இஜ்திமா 2018 ஆம் ஆண்டிற்கான ஒப்புதல்

**ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் மிகுந்த பரிவுடன் கிளை அமைப்புகளின் தேசிய இஜ்திமாக்களை 12,13,14 அக்டோபர் 2018 (வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள்.**

**கிளை அமைப்புகளைச் சார்ந்த உறுப்பினர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் காதியான் தாருல் அமானின் ஆன்மீகச் சூழலில் நடைபெறவிருக்கின்ற இந்த அருளுக்குரிய தேசிய இஜ்திமாவில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். இந்த இஜ்திமாக்கள் எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா. (பத்ர் வாரப் பதிப்பு)**

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 20 September 2018 Issue No. 38

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

செய்வார்கள். சிலர் செய்ய மாட்டார்கள் என்பது அவனது ஞானத்தில் முடிவு செய்யப்பட்டதாக இருந்து வருகிறது. ஆகவே, இந்த சமுதாயத்திலிருந்து யாராவது ஒரு மனிதர் முழுமையாக நபிமார்களின் நிலையில் தோன்றுவார் என்று இந்த சூரா ஃபாத்திஹா முன்னறிவிக்கின்றது;

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ என்னும் வசனத்திலிருந்து நிரூபணமாகின்ற முன்னறிவிப்பு முழுமையாகவும், நிறைவாகவும் நிறைவேறுவதற்காக இது நடந்துதான் ஆக வேண்டும். மேலும் இவர்களிலிருந்து ஒரு கூட்டத்தினர் ஹஸ்ரத் ஈஸா சாபமிட்டிருந்த, இறைவனது ஆக்கினைக்கு ஆளான அந்த யூதர்களைப் போன்று வெளிப்படுவார்கள் என்ற இந்த முன்னறிவிப்பு غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ என்னும் இந்த வசனத்திலிருந்து தெளிவாகிறது. இதுவும் நிறைவேற வேண்டும்.

மேலும் இவர்களில் வேறொரு கூட்டத்தினர் கிறித்தவர்களைப் போன்று ஆகிவிடுவார்கள். இவர்கள் மதுபானம் அருந்துதல், ஆகுமானதல்லாததை ஆகுமானதாக நம்புதல், கெடுதிகள் செய்தல் இவற்றின் காரணமாக இறைவனது வழிகாட்டலின் பாக்கியத்தை இழந்த கிறித்தவர்களாகி விடுவர். ஆகவே وَلَا الضَّآلِّيْنَ என்னும் இந்த வசனத்திலிருந்து வெளியாகிக் கொண்டிருக்கின்ற இந்த முன்னறிவிப்பும் நிறைவேற வேண்டியிருந்தது.

மேலும் இறுதி காலத்தில் முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுகின்ற ஆயிரக்கணக்கானோர் யூத குணம் உடையவர்களாக ஆகி விடுவார்கள் என்பது முஸ்லிம்களின் நம்பிக்கையில் இடம் பெற்ற ஒரு விஷயமாகும். மேலும் திருக்குர்ஆனில் ஒரு சில இடங்களில் இதைப் பற்றிய முன்னறிவிப்பு இடம் பெற்றிருக்கிறது.

மேலும் நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கிறித்தவர்களாக மாறி இருப்பதும் அல்லது கிறித்தவர்களைப் போன்று கட்டுப்பாடின்றி சுதந்திரமாக வாழ்க்கை நடத்தி வருவதும் வெளிப்படையாக நம்மால் அறியவும் உணரவும் முடிகிறது.

இது மட்டுமல்லாமல் முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுவோரில் பெரும்பாலார் கிறித்தவர்களைப் போன்ற வாழ்க்கை நடைமுறையை விரும்புகின்றனர். தங்களை முஸ்லிம்கள் என்று அழைத்துக் கொண்டு தொழுகை, நோன்பு, ஹலால், ஹராம் இவற்றின் சட்டங்களை மிகவும் வெறுப்புடன் பார்க்கின்றனர். யூத குணம் படைத்தவர்களும் கிறித்தவ குணம் படைத்தவர்களுமான இவ்விரு பிரிவினரும் இந்நாட்டில் பரவிக் கொண்டிருப்பதை நம்மால் காண முடிகிறது.

எனவே சூரா ஃபாத்திஹாவில் இடம் பெற்றிருக்கும் இவ்விரு முன்னறிவிப்புகளும் நிறைவேறியிருப்பதை நீங்கள் பார்த்து விட்டீர்கள். மேலும் பெரும்பாலான முஸ்லிம்கள் யூத குணம் உள்ளவர்களாகவும், கிறித்தவர்களின் போர்வையில் இருந்து வருவதையும் நீங்கள் உங்களது கண்களால் பார்த்து விட்டீர்கள்.

(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 43–45)

## வக்ஃபே நவ் பெற்றோர்களின் கடமை

(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 28.10.2016 அன்று ஆற்றிய ஜுமுஆ குத்பா பேருரையிலிருந்து...)

கடந்த நாட்களில் இங்கு வக்ஃபே நவ் பிள்ளைகளுக்காக வகுப்பு ஒன்றை நான் நடத்தினேன். அதில் ஒரு பையன் என்னிடம், நாங்கள் எங்களை வக்ஃப் செய்து முழு நேரமும் ஜமாஅத்திற்கு தொண்டாற்ற அர்ப்பணித்து விட்டால் எங்களது பெற்றோர்களுக்கு எங்களால் எப்படி பொருளாதார உதவி செய்ய முடியும்? அல்லது அவர்களுக்கான ஏனைய தொண்டுகளை எவ்வாறு எங்களால் ஆற்ற இயலும்? எனக் கேட்டான்.

நாங்கள் உன்னை வக்ஃப் செய்து விட்டோம். இனி நீ ஜமாஅத்தின் அமானிதமாகவே எங்களிடம் இருக்கின்றாய். மற்ற உனது சகோதர சகோதரிகள் எங்களுக்குத் தொண்டாற்றுவார்கள். நீ உன்னை முற்றிலும் காலத்தின் கலீஃபாவிடம் ஒப்படைத்து அவர்களின் கட்டளைக்கேற்ப நீ செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தை தாய், தந்தையர் குழந்தைப் பருவத்திலேயே வக்ஃபே நவ் பிள்ளைகளிடம் ஊட்டவில்லை என்பது அந்தப் பையனின் கேள்வியிலிருந்து வெளிப்படுகின்றது.

நான் அந்த தாய், தந்தையரிடம் முதலில் இதனை கூறிக்கொள்ள விரும்புகின்றேன். வக்ஃபே நவ் என்ற பெயர் மட்டும் போதுமானதல்ல. மாறாக, வக்ஃப் செய்யப்பட்ட பிள்ளை இளமைப் பருவத்தை அடையும் வரை பெற்றோர்களின் பொறுப்பு உள்ளது. அதன் பிறகு அந்தப் பிள்ளைகளின் பொறுப்பாகி விடுகின்றது. சில உலகக் கல்வியைக் கற்ற பெண் பிள்ளைகள் வெளிப்படையில் பெரிய உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர்; தொண்டாற்றுகின்றனர்.

ஆனால், பின் நாட்களில் சில உதாரணங்களும் காணக் கிடைக்கின்றன. ஜமாஅத் கொடுக்கும் அலோவன்ஸ் அவர்களுக்கு போதுமானதாக இருப்பதில்லை என்ற காரணத்தால் விலகி விடுகின்றனர். ஒரு பெரிய நோக்கத்தை அடைவதற்குத் துன்பத்தை எதிர்க்கொள்வதும் தியாகங்கள் செய்வதும் அவசியமாகும்.

எனவே, குழந்தைப் பருவம் முதல் வக்ஃபே நவ் பிள்ளைகளின் மூளைகளில் வாழ்க்கையை அர்ப்பணிப்பதை விட பெரிய விஷயம் வேறெதுவும் இல்லை என்ற எண்ணத்தை உருவாக்கி விட வேண்டும். உலக ரீதியில் பிறரைப் பார்ப்பதை விட அல்லது எனது இந்த Class fellow இன்ன கல்வியைக் கற்று இலட்சக்கணக்கில் சம்பாதிக்கின்றார். ஆனால், அவரது ஒரு மாத வருமானத்தில் ஒரு நாள் வருமானத்தைக் கூட என்னால் சம்பாதிக்க முடியவில்லையே என்ற எண்ணம் பிள்ளைகளுக்கு இருக்கக் கூடாது.

நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்
தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)
**தொலைபேசி எண்:**
**1800 425 40000**
இந்த **TOLL FREE** எண்ணில் ∴போன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad